# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS 22 of 2023 | **DW - 1** | **:** | Cross continuation |
| **Name** | பூவன் | **Father Name** | **:** | மாரியப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.01.2026 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் -11.43 AM

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

4. எனது அப்பா சம்பாதித்த சர்வே எண். 296/2A1 சொத்தை நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின் பதிவு எண். 2723/2023 என்று சொன்னால் பதிவு எண் சரியாக நினைவில் இல்லை. அந்த ஆவணத்தை பதிவு செய்யும்போது பட்டா எண். 241 என்ற பட்டாவை இணைத்துதான் பதிவு செய்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த பட்டாவில் சர்வே எண் 296/2A1 நிலத்திற்கான அளவு ஹெக்டர் 0.69.0 என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த அளவை ஏற்றுக் கொண்டுதான் நாங்கள் பத்திரம் பதிவு செய்தோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் சகோதரர்கள் வீதம் 55, 58, 52 சென்ட்கள் வீதம் நிலத்தை பிரித்துக் கொண்டு 5 சென்ட் கிணற்றை பொதுவாக வைத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அதன்படி சர்வே எண். 296/2A1 நிலத்தை எனது அண்ணார் முருகன் அவரது மக்களுக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மேற்படி நிலத்தில் அவருக்கு சென்ற 58 சென்ட் நிலத்தை சரிபாதியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் பதிவு எண் 5127 / 2023 என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்று நகல் தான் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்று சொன்னால் சரிதான் அந்த ஆவணம் **வா.சா. ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் பட்டாவில் குறிப்பிட்டுள்ள அளவு படி அவர் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் அது தவறு. அந்த நிலத்தில் அவர் நெல் மற்றும் கரும்பு பயிர் செய்து வருகிறார்

என்றால் அவருக்கு கிரயம் மூலம் பாத்தியம் செய்யப்பட்ட 2 ஏக்கர் நிலத்தில் மட்டும் செய்து வருகிறார்.

5. வாதி கிரயம் பெற்ற 2 ஏக்கரும் அவருக்கு முன்னதாக பாதிக்கப்பட்ட 63 சென்ட் ஆக மொத்தம் 2 ஏக்கர் 63 சென்ட்க்கு 2001 ஆம் ஆண்டில் பட்டா பெற்றுள்ளார் என்று சொன்னால் அது போலி பட்டா. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா. ஆ 2 தான் அந்த பட்டா புத்தகம் என்று சொன்னால் அது தவறான பட்டா. மேற்படி 2 ஏக்கர் 63 சென்ட் நிலத்தில் வாதியின் பெற்றோர் சமாதி அமைந்துள்ளது என்று சொன்னால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் ஏக்கர் 2.63 சென்ட் நிலம் வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்று நான் ஒப்புக் கொண்டுள்ளேன் என்று சொன்னால் இல்லை. மேற்படி 2 ஏக்கர் 63 சென்ட் நிலத்திற்கு தான் வாதி 2001 ஆம் ஆண்டில் இருந்து வரி செலுத்தி கந்தாய ரசீதுகள் பெற்று வருகிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதேபோல் நாங்கள் ஏக்கர் 1.70 சென்ட் நிலத்திற்கு வரி செலுத்தி கந்தாய ரசீது பெற்று வருகிறோம் என்று சொன்னால் சரிதான். வாதியின் 2 ஏக்கர் 63 சென்ட் நிலத்தை அவர் அனுபவம் செய்து வருகிறார் எங்களுடைய ஏக்கர் 1.70 சென்ட் நிலத்தை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் எங்கள் நிலத்திற்கும் வாதி நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல வாதி 2 ஏக்கர் நிலத்தை தான் அனுபவம் செய்து வருகிறார் 63 சென்ட் நிலம் ஏரியாக உள்ளது அதில் ஒரு பகுதியை நாங்கள் ஏரியில் தண்ணீர் இல்லாத சமயத்தில் அனுபவம் செய்து வருகிறோம் அவ்வாறு அனுபவம் செய்து வந்திருந்தால் நாங்கள் அனுபவம் செய்யும் பகுதிக்கு பட்டா கேட்டு மனு செய்திருப்போம் என்று சொன்னால் அது ஏரி என்பதால் மனு செய்யவில்லை அந்த 63 சென்ட் நிலத்திற்கு எத்திராஜ் பச்சையம்மாள் பெயரில் பட்டா இருந்து வந்தது அந்த நிலத்தை வாதி வாய்மொழி கிரையம் மூலம் பெற்று அனுபவம் செய்து வந்ததால் தான் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் அது தவறு. அவ்வாறான பட்டா 2001 ஆம் ஆண்டில் எங்களுக்கும் அவருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டது என்று சொன்னால் அது தவறு.

6. வாதி தருமபுரியில் குடியிருந்து வருகிறார் வாரத்திற்கு ஒருமுறை வந்து விவசாயம் செய்து வருகிறார் அவர் இல்லாத சமயத்தில் அவருடைய நிலத்தில் நாங்கள் ஆடு, மாடு மேய்த்தது தொடர்பாக எங்கள் மீது கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தார் நாங்களும் புகார் கொடுத்தோம். அவ்வாறு வாதி கொடுத்த புகாரின் பெயரில் காவல் நிலையத்தில் விசாரணையில் நாங்கள் வாதியின் நிலத்தில் மாடு கட்ட கூடாது என்று கூறியதின் பெயரில்

கட்டமாட்டோம் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செயல்கள் நான் இராணுவத்தில் இருந்த போது நடைபெற்றது எனக்கு அது தெரியாது என்று சொன்னால் எனக்கு தெரியும். அந்த நிலம் வாங்கும் சமயத்தில் எனக்கு வயது 17 நான் பிரமாணம் வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதி உரிய விலை கொடுத்து ஏக்கர் 2.63 சென்ட் நிலத்தை கிரயம் பெற்று பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் அதில் நாங்கள் இடையூறு செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

7. எனவே வாதி கோரி உள்ள பரிகாரங்களை வழங்குவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 1.70 சென்ட் நிலம் என்னிடம் உள்ளதால் அதை மீறி நிலம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல உரிமை உள்ளது. நான் நீதிமன்றத்திற்கு முழுமையான பொய்யான தகவலை கொடுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா படி தீர்ப்பானை பெற உரிமையுடையவர் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.

**முடிவு நேரம் –12.20PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.